**பேலியகொட நகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பேலியகொட நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பேலியகொட நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்பு இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலக்கம் 6.11 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடத்தின் போது புதிய நியமத்தின் பிரகாரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | உள்ளூராட்சி நிறுவனங்களுக் கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலக்கம் 9.9 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் மூலதன செலவின மானியங்களில் ஆண்டின் கொடுப்பனவுகள், மிகையில் இனங்காணப்பட்ட மானியமாக குறைத்து மிகுதி தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தின் கீழான மிகையில் இனங்காணப்படாத மானியத்தின் கீழ் குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக வெளி நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 3,253,153 தொகை மூலதன மானியமாக அவ்வாறு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | நியமத்தின் ஊடாக விரிவான விடயங்களை உள்ளடக்கி EG 3.2 இன் கீழ் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் வீதிகள், மதகுகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதி விடயங்களின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் முன்னைய ஆண்டில் ரூபா 16,056,292 மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 5,997,225 செலவில் அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகள், மதகுகள் மற்றும் வடிகாண்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | நியமத்தை நோக்காகக் கொண்டு விரிவான வகையில் உள்ளடக்கப்பட்ட | எதிர்வரும் ஆண்டின் போது புதிய நியமத்தின் பிரகாரம் கணக்கீடு | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | EG 3.1 இன் பிரகாரம் நடைமுறையான ஏதாவது மூலதன வேலைகள் இருக்குமாயின் அவை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண பதிவேட்டில் தனியான விடயமாக காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற 06 வேலைகளின் பெறுமதி ரூபா 8,425,448 கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத் தருகின்றோம். | |
| (உ) | இலக்கம் 3.5 இன் பிரகாரம் மற்றும் lGD/10A/4/நகி/2019 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 12 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது நிலையான சொத்துக்கள் 14 வகைகளின் கீழ் வகைப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் தொகுதி 06 தொகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது. | சொத்துக்களின் தொகுதிகள் 06 இற்கு மாத்திரம் இணங்கும் வகையில் நகர சபை கணக்குகளில் நிலையான சொத்துக்களின் 06 வகையின் கீழ் சமர்ப்பிக்கப்படுமென அறியத்தருகின்றோம். | - மேற்படி - |

### 1.6.2 கணக்கீட்டுக் கொள்கை

-----------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணனி மென்பொருள் சொத்தொன்றாக நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட வேண்டுமென வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 1,400,000 பெறுமதியான மென்பொருள் முறைமை கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் கொள்வனவு செய்யப்பட்ட முறையே ரூபா 100,080 மற்றும் ரூபா 102,383 ஆன நூலக புத்தகங்கள் நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,361,515 வழங்கல் மற்றும் உபகரண செலவினக் கணக்கில் வரவு வைத்து ஒதுக்க கணக்கில் செலவு வைக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் அப்பெறுமானத்தால் குறைத்தும் ஒதுக்கம் மற்றும் ஏற்பாடுகள் கணக்குகள் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | நகர சபைக்கு நன்கொடையாக கிடைத்த 03 கணனி இயந்திரங்கள் மற்றும் அச்சிடல் இயந்திரம் என்பவற்றின் பெறுமதி நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | ரூபா 178,168 பெறுமதியான 02 லொக்கர் யுனிட் மற்றும் ரூபா 23,000 பெறுமதியான பித்தள இலாம்பு தளபாங்கள் மற்றும் பொருத்திகளின் கீழ் இரு தடவை கணக்கீடு | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லா சொத்துக்கள் ரூபா 201,168 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (உ) | பேரேட்டுக் கணக்கில் ஆண்டின் ஆதனவரி மற்றும் வரியின் ஆரம்ப மீதி குறிப்பிடும் போது ஆதனவரிக் கட்டணம் ரூபா 29,733,799 மீதி மாத்திரம் பதியப்பட்டு அந்த கணக்கில் ஆதனவரி மற்றும் வியாபார வரி வருமானம் இரண்டு வருடங்களிலும் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் கீழ் பதியப்பட்டிருந்ததுடன் அனுமதிப்பத்திரக் கட்டணம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியில் ரூபா 391,800 வியாபார வரி ஆரம்ப மீதியும் உள்ளடக்கப்பட்டமையால் ஆதனவரி மற்றும் வியாபார வரிக் கணக்கின் மீதி அப்பெறுமானத்தால் குறைத்தும் அனுமதிப்பத்திரக் கட்டணம் அப்பெறுமானத்தால் அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத் தருகின்றோம். | - மேற்படி - |
| (ஊ) | நிலையான வைப்புக்காக மீளாய்வாண்டிற்குரிய வட்டி ரூபா 139,985 ஆக இருந்த போதும் ரூபா 193,848 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் நிலையான வைப்புக் கணக்கு மற்றும் மீளாய்வாண்டிற்குரிய வட்டி என்பன ரூபா 53,863 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் | எதிர்வரும் கணக்காண்டின் போது சரியாக தயாரிப்பதற்கு | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடுகள், முதலீட்டு மற்றும் நிதி செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கூட்டுமொததம் ரூபா 56,474,166 ஆகவும் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு ரூபா 45,244,473 ஆகவும் குறிப்பிடப்பட்டமையால் ரூபா 11,229,693 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | |
| (ஏ) | பிரதான பேரேட்டில் வருமான செலவினக் கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 33,423,228 ஆக இருந்ததுடன் அது நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் விரிவான வருமானக் கூற்றில் மிகை ரூபா 33,203,875 ஆக ரூபா 219,352 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இவ்வாறான தவறுகள் மேற்கொள்ளமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | - மேற்படி - |

**1.6.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 06 கணக்கு விடயங்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கின் மீதி மற்றும் உபயோக பதிவேடுகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 10,580,340 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | இந்த வேறுபாட்டினை நீக்கப்படுமென அறியத் தருகின்றோம். | உரிய மீதிகளின் வேறுபாட்டினை இணக்கம் செய்து கணக்குகளினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| உள்ளுராட்சி ஆணையாளரின் 2020 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய LGD/09/2019(I) ஆம் சுற்றறிக்கை | எல் ஜீ 21/2 படிவத்தில் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் மாகாண அரச உத்தியோகத்தர்களின் முற்பணம் பீ கணக்கின் எல்லை அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இந்த சபையினால் முற்பணக் கணக்கு எல்லை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களுடன் முற்பண பீ கணக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | மிகுதி கணக்கு காலப்பகுதியின் போது இந்த தவறை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | முற்பண எல்லையை அங்கீகரித்து முற்பணம் பீ கணக்கு தயாரிக்கப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 33,203,875 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 19,210,419 ஆகும்.

**2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வீதவரியும் வரியும் | | |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை ஆதனவரி பெறுமதி ரூபா 50,000 இனை விஞ்சிய 46 ஆதனவரி அலகுகளுக்காக அறவிட வேண்டிய நிலுவை | பதிலளிக்கப்படவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆதனவரி பெறுமதி ரூபா 4,006,408 ஆக இருந்ததுடன் அதில் 2022 ஏப்ரல் 22 இல் உள்ளவாறு ஒரு அலகிலிருந்து ரூபா 62,036 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | | |

(ஆ) வாடகை

---------------

| | | |
|---|---|---|
| (i) சபைக்குச் சொந்தமான பொதுச் சந்தையின் 25 கடைகளில் 06 கடைகளுக்காக எந்தவொரு உடன்படிக்கையும் மேற்கொள்ளப்படாதிருந்த துடன் 2022 மே 30 இல் உள்ளவாறு அந்த கடைகளிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 712,100 ஆகும். 09 கடைகளுக்காக கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கைகளின் செல்லுபடிக் காலம் முடிவடைந்து 30 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் புதிய உடன்படிக்கைகளில் கைச்சாததிடப்படாதிருந்த துடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த கடைகளிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 638,950 ஆகும். இலக்கம் 15/1/2 என்ற கடைக்காக கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையில் உடன்படிக்கை முடிவடைகின்ற காலம் குறிப்பிடப்படாதிருந்ததுடன் உடன்படிக்கை பூர்த்தி செய்யப்படாமல் இந்தக் கடைக்காக 2021 மே 30 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 27,500 ஆகும். | எதிர்காலத்தில் உடன்படிக்கை செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத் தருகின்றோம். | செல்லுபடியான உடன்படிக்கையில் கைச்சாத்திடு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கடை இலக்கம் 25/ஏ கடை 1982 ஆம் ஆண்டு முதல் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஆரம்பம் முதல் இதுவரை மாதாந்த வாடகையாக ரூபா 75 அறவிடப்பட்டிருந்தது. தற்போது அமுல்படுத்தப்படுகின்ற மதிப்பீட்டு அறிக்கையில் இந்த கடைக்காக மதிப்பீடு வழங்கப்படாதிருந்ததுடன் 40 வருடங்கள் முதல் வாடகையை திருத்தாமையின் காரணம் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | புதிய மதிப்பீடொன்றை பெற்று அடுத்துவரும் பொதுச்சபையில் சமர்ப்பித்து மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து மதிப்பீட்டை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத் தருகின்றோம். | மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை புதிய மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். |
| (iii) | தபால் அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக சபைக் கட்டிடமொன்று அரசாங்கத்தின் மதிப்பீடு பெறப்படும் வரை ரூபா 2,000 தற்காலிக மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கு 2020 யூன் 30 ஆந் திகதி வாடகைக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டு 2020 யூலை 10 ஆந் திகதி பொதுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக பொதுச்சபை தீர்மானம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை உரிய கட்டிடம் 2020 யூலை 20 ஆந் திகதி முதல் 2023 யூலை 19 ஆந் திகதி வரையான காலத்திற்கு மாதத்திற்கு ரூபா 2,000 தற்காலிக மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மாதாந்த வாடகை வருடத்திற்கு ஒரு தடவை திருத்த வேண்டுமென உடன்படிக்கை பிரிவுகளிலும் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் வாடகை திருத்தப்பட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீடொன்றை பெற்று அடுத்துவரும் பொதுச்சபைக்கு சமர்ப்பித்து மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து மதிப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அரசாங்கத்தின் | மதிப்பீட்டை பெற்றுக் கொண்டு வாடகைக்கு வழங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலும் அரசாங்கத்தின் மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) | சபைக்குச் சொந்தமான பெலியகொட மனிங் சந்தைத் தொகுதி 2022 மார்ச் 02 ஆந் திகதி பௌதீக பரிசோதனையின் போது சந்தை தொகுதியில் செயற்பாட்டில் உள்ள விற்பனைக் கடைகளின் அளவு 1457 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் நகர சபை இனங்கண்டிருந்த மொத்த விற்பனை கடைகளின் அளவு 626 மாத்திரம் ஆகும். அதனால் 2021 ஆம் ஆண்டின் போது நகர சபையினால் 496 விற்பனைக் கடைகளில் மாத்திரம் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. | தொடர்ச்சியாக நடாத்திச் செல்லப்படுகின்ற விற்பனைக் கடைகள் தொடர்பான அறிக்கையை பெற்று அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிடப்படும் என அறியத் தருகின்றோம். | சந்தை தொகுதியில் செயற்பாட்டில் உள்ள மொத்த விற்பனைக் கடைகளிலிருந்தும் அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | மீளாய்வாண்டில் வாடகை சிட்டையிடப்பட்ட தொகையான ரூபா 1,916,000 இலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 697,000 மாத்திரமே சேகரிக்கப்பட்டிருந்ததுடன் 2022 மே 31 இல் உள்ளவாற மேலும் அறவிட வேண்டிய தொகை ரூபா 329,200 ஆகும். | பதிலளிக்கப்படவில்லை. | சிட்டையிடப்பட்ட தொகையை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சனவரி 22 ஆந் திகதி நடைபெற்ற சுற்றாடல் மற்றும் சுகாதார குழு அறிக்கையில் ஏனைய விடயங்களின் கீழ் காண்பிக்கப்பட்ட பிரகாரம் வியாபார கழிவுகளுக்காக கழிவுப்பொருள் கட்டணம் அறவிடும் போது பொதுச் சபை அங்கீகாரத்தின் படி உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டதன் பின்னர் 2021 ஆம் ஆண்டிற்காக கட்டணம் அறவிடுவதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமையும் கழிவுகளை அளப்பதற்கு தராசு வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.<br>இதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்காக கழிவுப் பொருள் கட்டணம் அறவிடப்பட வேண்டிய நிறுவனத்தின் அளவு பௌதீக பரிசோதனையில் சரியான பிரகாரம் இனங்காணப்பட்டிருக்க வில்லை. பதிவேட்டின் பிரகாரம் 113 நிறுவனங்கள் இனங்காணப்பட்டு அதில் 60 நிறுவனங்கள் மாத்திரம் உடன்படிக்கை செய்திருந்ததுடன் குழு தீர்மானத்தின் படி கழிவுப்பொருட்கள் நிறையை அளப்பதற்கு தராசு வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஆகக்கூடிய செயற்திறனுடன் இந்த நிறுவனங்களின் வணிக கழிவுகளுக்காக கட்டணம் அறவிடப்பட்டுள்ளதுடன் தற்போது வரையில் 200 நிறுவனங்களுக்கு அண்ணளவான அளவு இனங்காணப்பட்டு கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறியத் தருகின்றோம். | பௌதீக பரிசோதனை யிலிருந்து நிறுவனங்களை இனங்கண்டு கழிவுப் பொருள் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மரணமடைந்த மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற 08 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 257,104 தொகையும், வேலை நீக்கம் செய்யப்பட்ட 39 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 776,707 தொகையும் மற்றும் சேவையை விட்டுச் சென்ற 06 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 717,053 தொகையுமாக மொத்த தொகையும் ஆக ரூபா 1,750,864 மொத்தத் தொகை 1998 முதல் 2012 காலப்பகுதியில் அறவிடப்படாது காணப்பட்டதுடன் அந்த மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நகர சபை கழிவுத்தளத்தின் கழிவுகளை துண்டுகளாக்குவதற்காக வாடகை அடிப்படையில் இயந்திரம் ஒன்று பெறப்பட்டிருந்ததுடன் துண்டுகளாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கழிவுப்பொருட்களின் அளவு அதற்காக செலவாகின்ற இயந்திர மணித்தியாலங்களின் எண்ணிக்கை போன்றவை தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் 2020 யூன் 23 ஆந் திகதி நடைபெற்ற நிதிக்குழு இதற்காக அங்கீகாரம் வழங்கியிருந்தது. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது இயந்திர மணித்தியாலத்தின் அடிப்படையில் இந்த இயந்திரத்திற்காக உடன்படிக்கை செய்த நிறுவனத்திற்கு ரூபா 2,844,800 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2021 செப்தெம்பர் 01 ஆந் திகதி முதல் | மீண்டும் உடன்படிக்கை செய்யும் போது மீற்றர் செயலிழந்த சந்தர்ப்பங்களின் போது நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை தொடர்பாக உடன்படிக்கையில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நாளொன்றிற்கான இயந்திரத்திற்காக ஆகக்கூடிய 04 மணித்தியாலங்களுக்காக செலுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற மையால் ரூபா 49,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதை | தேவையான நிபந்தனைகளை உள்ளடக்கி உடன்படிக்கையில் கைச்சாத்திடு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் உரிய மேற்பார்வையுடன் கழிவுப்பொருள் முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

ஒக்தோபர் 01 ஆந் திகதி வரையான காலத்தில் கழிவுப்பொருட்களை துண்டுகளாக்கும் இயந்திரத்தின் மீற்றர் செயலிழந்திருந்த போது 68.9 இயந்திர மணித்தியாலங்களுக்காக ரூபா 122,150 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக உடன்படிக்கையில் எந்தவொரு நிபந்தனையும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

அவ்வாறே ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் 13 ஆந் திகதி வரை கழிவுப்பொருட்களை துண்டுகளாக்கும் இயந்திர மணித்தியாலம் 18.7 மாத்திரம் செலிடப்பட்டிருந்த போதிலும் 33.3 மணித்தியாலங்களுக்காக ரூபா 49,000 செலுத்தப்பட்டமையால் 14.6 மணித்தியாலங்களுக்காக ரூபா 16,275 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

அறியத் தருகின்றோம்.